வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 3342/ அ2/2022 நாள் 05.09.2022

பொருள் மெட்ரிகுலேசன் பள்ளிகள் – நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் 2013 - 2014 முதல் 2021-2022 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் – 2011 இன் படி 25 % மாணவர் சேர்க்கை வழங்கப்பட்டது – சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் ஈடுசெய்யக் குழுக்கள் பள்ளி ஆய்வு செய்தல் – ஈட்டளிப்பு தொகைக்கான கருத்துருக்கள் தயார் நிலையில் வைத்திருக்க கோருதல் – தொடர்பாக.

பார்வை தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை -6, ந.க.எண் 1216/இ1/2022 நாள் 22.08.2022

பார்வையில் காணும் கடிதத்தின் படி, குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் , 2009 பிரிவு 12 (1) சி மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் , 2011 விதி (8 ) ன் படி, 25 % இட ஒதுக்கீட்டில் நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகள் சிறுபான்மையற்ற தனியார் பள்ளிகளில் சேர்க்கை செய்யப்பட்டு 2013 -2014 ஆம் ஆண்டு முதல் 2020 - 2021 ஆம் ஆண்டு வரை எல்.கே.ஜி முதல் 8 ஆம் வகுப்புகளில் கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் 2021-2022 ஆம் கல்வியாண்டில் எல்.கே.ஜி வகுப்பில் சேர்க்கை செய்யப்பட்டு கல்வி பயிலும் குழந்தைகளுக்கான கல்வி கட்டணமானது பள்ளி ஈட்டளிப்பு தொகை பெற்று வழங்க ஏதுவாக கருத்துருக்கள் தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறது.

மேற்காண் பணி யினை சரிபார்க்க சரிபார்ப்பு குழு உறுப்பினர்கள் தங்கள் பள்ளிக்கு வருகைப்புரிய உள்ளதால் பள்ளி ஆவணங்கள் மற்றும் RTE மாணவர்களின் கீழ்க்காணும் விவரங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

1. மாணவர்களின் வகுப்பு வாரியான விவரங்கள்
   ( எண்ணிக்கை வாரியாகவும் மற்றும் மாணவரின் பெயர் பட்டியல் வாரியாகவும் )
2. தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக்குழுவால் பெறப்பட்ட 2021- 2022 ஆம் கல்வியாண்டிற்குரிய ஆணை நகல் அல்லது கடைசியாக பெறப்பட்ட ஆணை நகல்

3. தங்கள் பள்ளிக்குரிய வங்கிக் கணக்கு விவரம் ( முதல் பக்க நகல் )
4. 12 (1) C Claim Form ஈட்டளிப்பு தொகைக்கான படிவம் -4 நகல்கள் ( கடந்த ஆண்டை போலவே)
5. Profoma -1 -4 ( கடந்த ஆண்டை போலவே)
6. Team Verification Format – 1 to 9 Pages -4 நகல்கள் (கடந்த ஆண்டை போலவே)
7. மொத்த மாணவர்கள் மற்றும் ஈட்டளிப்பு தொகை விவரம் (படிவம் இணைக்கப்பட்டுள்ளது )
8. தற்போது தங்கள் பள்ளியில் குலுக்கல் முறையில் தேர்ந்தேடுத்து சேர்க்கை செய்து அம்மாணவனின் விவரம் Emis ல் Tagging ஆகாமல் அல்லது Un tagging செய்யப்பட வேண்டிய மாணவனின் விவரங்கள் வகுப்பு வாரியாக தட்டச்சு செய்து பள்ளி முதல்வரின் முகப்பு கடிதத்துடன் 2 நகல்களில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேற்காண் விவரங்கள் அனைத்து குழு சரிபார்ப்பு அலுவலர்கள் வரும் முன் தங்கள் பள்ளிகளுக்கான விவரங்கள் தயார் நிலையில் வைத்திருக்குமாறு அனைத்து மெட்ரிக் &மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளுக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலமாக தகவல் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு**

உரிய படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்

1. முதல்வர்கள் / தாளாளர்கள்

   அனைத்து மெட்ரிக் / நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் ,வேலூர் மாவட்டம்
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடக்கைகைக்காகவும் அனுப்பலாகிறது.